★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/89 5/78

மலர்: 21 மாசி 12 ரபி-அவ் 26 இதழ்: 13
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-2-79


## வல்வை ஆஸ்பத்திரி ஊழியர் சம்பளப்பணம் கொள்ளை

### 13,500 ரூபாயுடன் சடை வாலிபர் மாயம்

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறை ஊறணி அரசினர் ஆஸ்பத்திரி ஊழியர்களின் சம்பளப்பணமான 13,500 ரூபா நேற்றுக்காலை துப்பாக்கி முனையில் இரு இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை, பருத்தித்துறை இலங்கை வங்கியிலிருந்து ஊழியருக்குச்சம்பளம் கொடுப்பதற்காக 13,500ரூபா ஆஸ்பத்திரிக்குக்கொண்டுசெல்லப்பட்ட பின் இச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

சைக்கிளில் வந்த, இரண்டு முடிவளர்த்த இளைஞர்கள், துப்பாக்கியையும், கிறிஸ்கத்தியையும் காட்டிப் பயமுறுத்தி பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

வல்வெட்டித்துறைபொலிஸ்

[2-ம் பக்கம் பார்க்க]

# வியட்நாம் மாகாணத் தலைநகர் நான்கு சீனப்படைகளின் வசம்!

## 12 ஆயிரம் சீனர்கள் பலி என்கிறது வியட்நாம்

### ரஷ்ய ஆயுதங்க வியட்நாமில் குவிகிறது

பீக்கிங், பெப். 23

சீன-வியட்நாம் யுத்தம் 7 வது நாளான இன்று மேலும் உக்கிரம் அடைந்துள்ளதாகவும் சீனப்படைகள் நான்கு வியட்நாம் மாகாணத் தலைநகரங்களைக் கைப்பற்றிய பின்னர் வியட்நாம் தலைநகரான ஹனோய்க்குச் செல்லும் வீதியில் வெகுவேகமாக முன்னேறி வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

சீனாவின் சிரேஷ்ட உதவிப்பிரதமர் திரு. டெங்சியாவோ பெங் சீனாவின் ராணுவ நடவடிக்கைகளை தாமாகவே முன்னின்று நடத்திவருகின்றார் என்றும் அறிவிக்கப்பட்டது

**12 ஆயிரம் சீனர் பலி**

இதே வேளையில் வியட்நாம் படைகள் தொடர்ந்துகடும் சமர் செய்து வருவதாகவும் ஆறு எல்லை மாகாணங்களில் இதுவரை வியட்நாம் படைகள் 12 ஆயிரம் சீனர்களைக் கொலை செய்துவிட்டதாகவும் 140 டாங்கிகளையும் கவசவண்டிகளையும் நாசப்படுத்தியுள்ளதாகவும் வியட்நாம் வானொலி அறிவித்தது.

**வியட்நாமுக்கு ரஷ்ய ஆயுதங்கள்**

இதேசமயம் நான்கு பெரிய விமானங்களில் ரஷ்ய நவீன ஆயுதங்கள் வியட்நாமுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்ய இராணுவ நிபுணர்களும் வியட்நாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சீனாவுக்கு எதிராகப் போரிடுவதற்கு தயாராக இருக்கும் ரஷ்யப்படையின் பிரதம தளபதி தென்சீனக்கடலில் தற்போது தங்கியிருக்கும் எட்டு சோவியத் சப்பல்களில் ஒன்றில் தங்கியிருந்து நிலைமையை அவதானித்து வருகிறார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க ஹனோய்க்கு 140 கிலோமீட்டர் தொலைவில் சண்டைசெய்து வரும் சீனப்படைகள் வியட்நாமின் வெடிமருந்துச்சாலைகளைக் கைப்பற்றியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. [இ]

### பாரசூட் மூலம் அமெரிக்கா நோட்டம்

வாஷிங்டன், பெப் 23

சீன-வியட்நாம் யுத்தபிராந்தியத்தில் அமெரிக்கா பாரசூட் முலம் நவீன சாதனங்களை இறக்கி அவற்றின் மூலம் யுத்த நடவடிக்கைகளை அவதானித்துவருகிறது என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சோவியத்யூனியனைவிட போர் பற்றிய தகவல்களை அமெரிக்காவே அதிகம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டன.

மலையும் காடுகளும் நிறைந்த பிரதேசங்களில் போர் நடைபெற்றுவருவதால் பரசூட் மூலமே தகவல்களைப் பெற இலகுவாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

## யாழ். வளாக பெண் ஊழியர் மர்மமரணம்! தீர்ப்பு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பெண் தொழில் நுட்பவியலாளர் ஒருவர் கடமை நேரத்தில் ஆய்வுகூடத்திலேயே மயங்கி விழுந்து மரணமானார்.

செல்வி ஜோய்ஸ் சந்திராதேவி எட்வேட் [வயது 25] என்பவரே நேற்றுமுன்தினம் மரணமானவராவார்.

மரணமானவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அவரது உயிர் பிரிந்து விட்டதாம்.

யாழ். மரணவிசாரணை அதிகாரியும் பதில் நீதிபதியுமான திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்திய போது விரிவுரையாளர் செல்வி யோகேஸ்வரி ஆறுமுகம், இரசாயனப் பகுதி அதிபர் விநாயகர் பசுபதி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

சட்டவைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை நடத்தி நச்சுத்திராவகம் உட்கொண்டதால் மரணம்சம்பவித்துள்ளது எனத் தெரிவித்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞருக்கு வாசுதேவா ஆதரவு

### அரசின் கொள்கைக்கு கண்டனம்

[கொழும்பு]

"முதலாளித்துவ அரசின் வகுப்புவாதக் கொள்கைக்கு எதிராக, ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க முயன்ற தமிழ் மாணவர்களையும், தமிழ் ஆசிரியர்களையும் பயமுறுத்தும் அரசாங்கத்தையும், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவையும், கல்வி மந்திரியையும் கண்டிக்கிறோம்."

[6-ம் பக்கம்பார்க்க[

## சீனாவின் தாக்குதல் பற்றி இலங்கை நிலை என்ன?

### பாராளுமன்றத்தில் 'தர்மர்' கேள்வி

(கொழும்பு)

"வியட்நாம் மீது சீனாவின் தாக்குதல் உலக யுத்தத்திற்கே அடிகோலுகிறது' இந்துசமுத்திரப் பிரதேசத்தில் வாழும் மக்களின் அபிலாசை, அதனைச் சமாதானப் பிராந்தியமாக்குவதே சீனாவின் தாக்குதல் இந்த அபிலாசையைத் தவிடுபொடியாக்குகிறது"

பாராளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த மானிப்பாய் எம் பி. திரு வி. தருமலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு வி. தருமலிங்கம் மேலும் பேசுகையில், "வியட்நாமில் சீனா பெரிய அளவில் தாக்குதல் நடத்திவருவது உலகநாடுகள் அறிந்ததே,

"வியட்நாமில் சீனப்படைகள் தாக்கியபோதும், வியட்நாம் மக்கள் எந்தத் தாக்குதலையும், அது சீனாவிடமிருந்து வந்தாலும்சரி, அமெரிக்காவிடமிருந்து வந்தாலும்சரி சமாளிப்பார்கள் என்பது தெரிந்ததே

**அக்கறையின்றி இருக்க முடியுமா**

"வியட்நாமியர், சீனப் படைகளை அடித்துநொருக்கித் தொடர்ந்தும் யுத்தம்செய்து வருவது தெரிந்ததே. அப்படியிருக்கையில், சீனாவின் தாக்குதலை நாம் அக்கறையின்றிப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது

"உலகில் எந்தவொரு நாடும் இதனையொட்டி அக்கறையீனமாக இருக்கமுடியாது

'சீனாவின் இத்தாக்குதல்

[6-ம் பக்கம் பார்க்க[

## "தீவிரமாக ஆராய்ந்தே கருத்து வெளியிடலாம்"

-- பிரதமர்

[கொழும்பு]

"உலகத்தில் அமைதி சமாதானத்தையே விரும்புகிறோம். கூட்டுச்சேராக்கொள்கையைப் பின்பற்றுகிறோம். வியட்நாம் சண்டை ஒரு சர்வதேசரீதியிலான உலகப் பிரச்சினையாகும். ஐ நா. சபை இதுபற்றி ஆராய்ந்து வருகிறது. ஆறுதலாகத் தீர்க்கமாக ஆராய வேண்டும், அதன்பின்பே அரசின் கருத்துக்களை வெளியிடலாம்"

[6-ம் பக்கம் பார்க்க]

## 'இராசு வை நேரில் அழைத்து விசாரிக்க முடிவு!

[கொழும்பு]

மட்டக்களப்பு எம் பி திரு செ. இராசதுரைமீது கூட்டணி தலைமைப் பீடத்தினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து அவரை நேரடியாக அழைத்து விசாரிப்பதென்று நேற்று கொழும்பில் கூடிய கூட்டணி நடவடிக்கைக்குழு தீர்மானித்தது.

திரு. இராசதுரையின் விவகாரம் குறித்து நேற்றைய கூட்டத்தில் பூர்வாங்க ஆலோசனைகளை நடத்தப்பட்டது.

திரு இராஜதுரை மீதான குற்றச் சாட்டுக்கள் குறித்து அவருக்கு குற்றப்பத்திரிகை அனுப்புவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

கொழும்பில் கூட்டணித் தலைவர் திரு எம் சிவசிதம்பரத்தின் இல்லத்தில் திரு வி. என். நவரத்தினத்தின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. [ம-இ]

# கேள்வி விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகளுக்காக நிறுவனங்களிடமிருந்தும் ஒப்பந்தக்காரரிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. மேற்பக்க றேடியேற்றர் ராங் கழற்றி சுத்தம்செய்து திரும்பப் பொருத்துதல்.
2. மேற்பக்க கீழ்ப்பக்க றேடியேற்றர் ராங்குகள் கழற்றி சுத்தம் செய்து திரும்பப் பொருத்துதல்.
3. மேற்பக்க கீழ்ப்பக்க றேடியேற்றர் ராங்குகள் கழற்றி புதிய றேடியேற்றர் பொருத்துதல்.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அ, ஆ தலைப்புகளில் தனித் தனி கேள்விகள் அனுப்டப்பட வேண்டும்.

அ. திருத்த வேலைகளுக்கான பொருட்கள் சபையால் வழங்கப்படும்.

ஆ. திருத்த வேலைகளுக்கான பொருட்கள் கேள்விக் காரரால் கொண்டுவரப்படவேண்டும்.

விண்ணப்பதாரர் தம்மால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் கூடிய வேலையின் அளவையும் தேவைப்படும் நேரத்தையும் குறிப்பிடவேண்டும்.

தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் ''றேடியேற்றர் திருத்துவதற்கான கேள்வி'' என்று குறிப்பிடப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 10-03-79ந் திகதி அல்லது அதற்குமுன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

தலைவர்

**கேள்விச்சபை,**

**பிரதேச காரியாலயம்**

வ. பி. போ. சபை
165, 4ம் குறுக்குத்தெரு
1732 யாழ்ப்பாணம்

---

யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையுள்ளது)

## கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்திற்கு 20 அந்தர் தராசு உடனடியாகத் தேவைப்படுகிறது. விற்பனைப்படுத்த விரும்புவோர் 10-03-'79-ந் திகதிக்கிடையில் கூறுவிலையை அறியத்தருவதுடன், பார்வையிடும் நேரத்தையும் அறியத்தரவும்.

பொதுமுகாமையாளர்.

74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1979-02-22. 1730

---

வட பிராந்திய

போக்குவரத்துச் சபையின்

## ஏலவிற்பனை

பஸ் வண்டிகள், என்ஜின்கள்

மேற்படி ஏலவிற்பனை எதிர்வரும் 8-3-79 வியாழக்கிழமை காலை 9-30 மணியளவில் கோண்டாவில் சாலையில் நடைபெறும்;

ஏல விற்பனைக்குரிய பொருட்களின் விபரம்:

1. லேலண்ட் கொமட், பி எம் சி 5.1, பி எம் சி 3.4 பஸ் வண்டிகள் — 21
2. பாவித்த பி எம் சி என்ஜின்கள்
3. பாவித்த டயர், டியூப், டியூப் பட்டிகள்
4. றிம்கள்
5. ஆசனச்சட்டங்கள், கிளச்பிளேற், பிறேக் றம் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள்

இவற்றைப் பார்வையிட விரும்புவோர் பலாலி வீதியிலுள்ள கோண்டாவில் சாலையில் வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரடியாகப் பார்வையிடலாம். மேற்படி பொருட்களை ஏலத்தில் பெற்றுக் கொள்பவர் பெறுமதியின் 25% பணத்தை உடன் செலுத்தி மிகுதி 75% பணத்தை 3 நாட்களுக்குள் செலுத்தி இதற்குரிய பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் இல. 165, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் அமைந்துள்ள

**வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்**

தலைமைக் காரியாலய
விநியோக உத்தியோகத்தருடன்
தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,

வ பி போ ச
165, 4-ம் குறுக்குத் தெரு, ஏல விற்பனை.
யாழ்ப்பாணம். 1733

---

## வல்வை ஆசிரிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்ஜன்ட் பியதாச, விஜய கான்ஸ்டபிள்களான கந்தசாமி வயிரமுத்து, பண்டா, குமாரசிங்கா ஆகியோர் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

அப்பகுதியிலுள்ள வீடுகள் சோதனையிடப்பட்டதுடன், வாகனங்களும் சோதனையிடப்பட்டன. இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. (புலோலி-க)

## சிவராத்திரி விழா

[சித்தன்கேணி]

சித்தன்கேணி சிவசிதம்பரேசுவரர் ஆலயத்தில் சிவராத்திரிவிழா சிறப்பாக நடைபெறவிருக்கின்றது.

சிவராத்திரி விழாவின் போது இன்னிசைக் கச்சேரி, கதாப்பிரசங்கம், விசேஷ நாதஸ்வரக்கச்சேரி ஆகியவை நடைபெற இருக்கின்றது. நான்கு ஜாமங்களிலும் மிகச் சிறப்பாக ஆராதனை நடைபெற இருப்பதுடன் அதிகாலை சுவாமி வீதிவலம் வருவார்.

## அறிவித்தல்

யாழ்ப்பாண

மாநகராட்சி மன்றம்

பொதுமக்கள் தங்கள் வளவிலுள்ள குப்பை கூழங்களை வீதியோரங்களில் குவித்து வைப்பதை தவிர்க்கவேண்டுமென இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இவ்வாறு குப்பைகளை வீதிகளில் குவிப்பதால் நகரத்தின் சுகாதாரமும் அழகும் கெடுகின்றது. இந்நகரை அழகாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க பொதுமக்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பு எமக்கு அவசியம் தேவைப்படுகின்றது.

எனவே இனிமேல் வளவுகளில் சேரும் எல்லாவிதகுப்பை கூழங்களையும் ஒரு வாளியில் இட்டு அதனை தத்தமது வளவுகளுக்குள்ளேயே மாநகரசபை சுகாதார சேவையினர் வந்து எடுக்கக்கூடியதாக வைத்திருக்கவேண்டுமென்று வரியிறுப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இவ்வாறு செய்வதால் எங்கள் நகரத்தின் அழகையும் சுகாதாரத்தையும் பேணிக் காக்கக்கூடியதாயிருக்கும். குப்பை கூழங்களை வீதியெங்கணும் குவித்து வைப்பது பார்க்க அருவருப்பும் சுகாதாரத்திற்குக் கெடுதியையும் விளைவிக்குமென்பது வெளிப்படை. இவ்வாறு வீதிக்கரைகளில் குப்பை கூழங்களை குவித்து வைப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எனவே எமது வேண்டுகோளுக்கு செவிசாய்த்து எம்முடன் ஒத்துழைக்குமாறு சகல வரியிறுப்பாளர்களையும் அன்புடன்கேட்டுக் கொள்கிறேன்.

க. சிவஞானம்
விசேட ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22-2-1979 1731

---

(உடுப்பிட்டி)

பள்ளிக்கூடச் சிறுமியின் காப்புக்கள் அபகரிக்கப்பட்டன. கரணவாய்மணியகாரன் சைவ வித்தியாசாலையில்பாலர் வகுப்பில் பயிலும் எட்டு வயதுச் சிறுமியின் காப்புகளே அபகரிக்கப்பட்டன.

## காணவில்லை



சின்னவன் இளையவன்

கோணாவளை வசாவிளானைச் சேர்ந்த சின்னவன் இளையவனை ஒருமாதமாகக் காணவில்லை. வயது 70, உயரம் கட்டையானவர் இவரைக் காண்பவர்கள் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்புகொள்ளலாம்.

எஸ். குழந்தைவேலு
கோணாவளை
வசாவிளான்.

1722

## அறிவித்தல்

நாகர்கோவில்

நாகதம்பிரான்

தேவஸ்தானம்

மேற்குறித்த தேவஸ்தானத்தில் வருடாந்த உற்சவம் மற்றும் விசேட பூசை வைபவங்களை தனித்தோ கூட்டாகவோ நடத்தி வரும் வழிபாட்டுக்காரர்கள் ஒவ்வொருவரும் மேலும் அவ்வைபவங்களை தொடர்ந்து செய்ய விரும்பினால் பெயர், விலாசம், இதுவரை செய்துவரும் வைபவ விபரம் பங்காளரின் விபரம், பரிபாலனசபை அங்கத்துவ இலக்கம் என்னும் விபரங்களைக் கொடுத்து இவ் விளம்பரத் திகதியிலிருந்து 30 நாட்களுக்கிடையில் தலைவர், நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை, நாகர்கோவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமும் அன்றி நேரிலோ கிடைக்கச்செய்யும்படிவேண்டுகிறோம்.

ஆலய நித்திய பூசைகளையும் விசேட வருடாந்த உற்சவங்களையும் ஒரு ஸ்திரமான திட்டத்திற்கமைய நடத்தக் கருதியே இவ்விபரங்கள் கோரப்படுகின்றன.

இப்படி நீங்கள் சபைக்கு தெரியப்படுத்தத் தவறின் உங்கள் உங்கள் உரிமைகளை சபை ஊர்ஜிதம் செய்வது கஷ்டமாய் இருக்கும் என்பதை தயவாய் அறிவிக்கிறோம்.

தலைவர்,
நாகர் கோவில் நாகதம்பிரான்
ஆலய பரிபாலன சபை.
1724

---

யாழ். நகரில் கிளை திறக்கவிருக்கும், கொழும்பில் பிரபலமிக்க ஸ்தாபனமொன்றுக்கு நகர வர்த்தகப் பகுதியில் சுமார் 750 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட காரியாலய வசதி தேவை. நீதிமன்றம், பிரதான வீதி ஆகியவற்றிற்கு அண்மித்த சுற்றுடலில் உள்ள வீடுகள் குத்தகைக்கு அல்லது உடன் விற்பனைக்கு இருப்பின் விரும்பப்படும்.

விபரங்களைக் குறிப்பிட்டு எழுதவும்

C/o. த. பெ. எண்.: 945
கொழும்பு.
தரகர்கள் தேவையில்லை
1734

---

## வரி விளம்பரம்

### தேவை

காசாளர், ரீமேக்கர், சப்ளையர், சமையல்காரர் ஆகியோர் உடன் தேவை. நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். வி. அரியரத்தினம் ''நியூ லக்ஷ்மி கபே'' வாடியடி, பூநகரி. 1718

### விற்பனைக்கு

ஒஸ்டின் ஏ 30 EN 6000 4 கதவு நல்ல நிலைமையில் ஸ்கந்தராசா கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 1726

சமீபத்தில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான 'மொறிஸ் ஒக்ஸ்போட்' கார் விற்பனைக்கு இருக்கிறது. அழகான கிறீம்கலர். 8 சிறி இலக்கம். புதிய ரயர்கள். நல்ல திறமான பாவிப்பு. உடனே முந்துங்கள். அ. வசந்தகுமார், இளவாலைச் சந்திக்கு அருகாமை. 1721

25-2-79 மகா சிவராத்திரி அன்று திருக்கேதீஸ்வரத்தில் மில்க்வைற் விளம்பர விற்பனை வாகனத்தில் மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனை நடைபெறும். மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலிதீன் பாக்கும் கண்டரும் கீரை விதை பக்கட்டும் அன்பளிப்பாக கொடுக்கப்படும் மில்க்வைற் மேலுறைகளை சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து சிறந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்: மில்க்வைற் யாழ்ப்பாணம்: 1710

### கல்வி

யாழ் நகரின் சிறந்த தொழில்நுட்ப நிறுவனம், குளிரூட்டல் கல்வி (Refrigeration and Air Conditioning) கற்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முடிவு திகதி 28-2-79. I. A. R 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1708

## ஆலயக் குருக்கள் தேவை

நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலயத்தில் நித்திய பூசை விசேட உற்சவங்கள் ஆகியன செய்வதற்கு 21 வயதிற்கு மேற்பட்ட 3 வருடத்திற்கு குறையாத பூசை அனுபவம் உடைய கோவிலில் தங்கி மூன்று காலப்பூசை செய்வதற்கேற்ற சிவப்பிராமணக் குருக்கள் தேவை. ரூபா 200/- முதல் ரூபா 300/- வரையிலான சம்பளம் ஆரம்பத்தில் வழங்கப்படும். விண்ணப்பிப்போர் பரிபாலன சபைகோரும் பொழுது ரூபா 2000/-த்திற்குக் குறையாத உறுதிப்பிணை அல்லது ரூபா 1000/-த்திற்குக் குறையாத ரொக்கப் பிணை செலுத்த சம்மதம் அளிக்கவேண்டும்: குருவாசம் அமைத்துக் கொடுக்கப்படும். மேலும் விபரங்களுக்கு செயலாளர் நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை நாகர் கோவில் என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் விளம்பரம் கிடைத்த 7 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவேண்டும். 1725

**வியாபாரம் பெருக**

**விளம்பரம் செய்க**

# மக்கள் கருத்து

## காவலூர் மாணவர்க்கு தனி பஸ்சேவை கிடைக்குமா?

ஊர்காவற்றுறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே நடாத்தப்படும் பஸ்சேவை ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு முறையே நடாத்தப்படுகிறது. ஊர்காவற்றுறையிலிருந்து தினமும் 9 மணிக்கு வேலைக்கு நிற்கவேண்டிய அரச, தனியார் துறை ஊழியர்கள் சுருவில் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் செல்ல வேண்டுமெனில் காலை 7-45க்கு ஊர்காவற்றுறையிலிருந்து புறப்படும் பஸ்ஸிலேயே கட்டாயம் சென்றாக வேண்டும். அது தவறின் அவர்கள் அன்று கடமைக்குச் சரியான நேரத்துக்குச் செல்லத்தவறிவிடுவார்கள் சுருவில் ஊடாகச்செல்லும் பஸ் வண்டியில் ஒரு பஸ்ஸிற்கு கூடுதலான (அவர்கள் பஸ்ஸில் குறிப்பிட்டுள்ள பிரயாணிகள் தொகைக்கு) பிரயாணிகளே செல்கின்றனர். அப்படியிருக்கையில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவமாணவிகளும் பாடசாலைக்கு குறிப்பிட்ட நேரத்தில் செல்வதெனில் அவர்களும் இந்த 7-45க்குப் புறப்படும் பஸ்ஸிலேயே செல்ல வேண்டியகட்டாய நிலையிலுள்ளனர். கரம்பன், சுருவில், புளியங்கூடல் போன்ற பகுதிகளிலுள்ள சுமார் 100 பாடசாலை மாணவர்களையும், 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் கடமைக்கு நிற்கவேண்டிய ஊழியர்களையும் கட்டாயம் ஏற்றியே தீரவேண்டிய ஒரு சங்கடமான நிலை நடாத்துநர்களுக்கு ஏற்படுகிறது.

இப்படி புளியங்கூடல் சந்திக்கு முன்னுள்ள பகுதியிலுள்ள மாணவர்களாலும், ஏனைய பிரயாணிகளாலும்பஸ் வண்டி நிரம்பிவிடுவதால் தொடர்ந்து பிரயாணிகளை ஏற்றமுடியாததால் புளியங்கூடல் சந்தியிலிருந்து வேலணை மத்திய மகாவித்தியாலயம் வரையுள்ளபிரயாணிகள் குறிப்பிட்ட நேரத்துக்கு வேலைக்குச் செல்ல முடிவதில்லை. பாடசாலை மாணவர்களுக்கென தனியானதொரு பஸ் சேவையை ஊர்காவற்றுறையிலிருந்து சுருவிலூடாக இதே நேரத்தில் நடாத்தினுல் பாடசாலை மாணவர்கள் அதுவும் சின்னஞ்சிறுவர்கள் நல்லமுறையில் பாடசாலை போய்ச்சேருவார்கள். அத்துடன் குறிப்பிட்ட நேரத்துக்கு வேலைக்குச் செல்ல முடியாமலிருக்கிற பிரயாணிகளும் நன்மையடைவார்கள் இது விஷயத்தில் வட பிராந்திய இ. போ. ச. தலைவரும், இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எஸ். குகநாதன்
தென்கரம்பன்.

0 0 0

## பாக்குநீரிணையும் இராமர் அணையும்

ஆழிக்குமரன் ஆனந்தனின் சாதனை நிகழ்ச்சியொன்று யாழ். நகரில் நடக்கும் என்ற தலைப்பில் தங்கள் 13-2-79 அன்றைய பதிப்பினில் வெளியாகியிருந்த செய்தியில் ''ஏற்கனவே பாக்குநீரிணையை மன்னார்க் கரையிலிருந்து "நீந்திச்சென்று தனுஷ்கோடியை அடைந்து.........................'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து அதிர்ச்சியடைந்தேன். அவர் அவ்விதம் நீந்தியது பாக்குநீரிணையல்ல இராமர் அணையேயாகும். அம்முயற்சியை அவர் மேற்கொண்டபொழுது தங்கள் பத்திரிகை தவிர்ந்த ஏனைய பத்திரிகைகள் அப்பகுதியினை பாக்குநீரிணை என பிரசுரித்த பொழுது நான் பத்திரிகை கவுன்சிலுக்கு செய்த மனுவை யடுத்து ஏற்பட்ட இணக்கத்தின் பேரில் எல்லாப் பத்திரிகைகளும் விளக்கங்களுடன் திருத்தங்களை அதே பிரபல்யத்துடன் செய்தன.

ஏனைய பத்திரிகைகள் எல்லாம் தவறு விட்டபொழுது தங்கள் பத்திரிகைகளின் அந்நாளைய வார ஏடுகளில் ஒன்று வரைபடங்களுடன் அப்பகுதி இராமர் அணையென விரிவாக விளக்கின அப்பொழுது நான் தங்கள் பத்திரிகையின் தன்மையை மெச்சினேன். அதே பத்திரிகை இந்தத் தவறினைச் செய்யும்பொழுது அதிர்ச்சியடைகின்.

தவறினைத் திருத்துவீர்களென எதிர்பார்க்கிறேன் பாக்குநீரிணையை முதன் முதன்முதல் நீந்திக் கடந்தவர் மு. நவரத்தினசாமி,

ந. இராமச்சந்திரன்,
'சந்திர உதயம்',
தொண்டைமானாறு.

## தமிழ் மாணவர்களின்

# பாடசாலைப் பகிஷ்கரிப்பு சண்முகதாசன் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

''அரசின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் தமிழ் மாணவர்கள், வாலிபர்கள் ஐக்கியப்பட்டு நடாத்திய பாடசாலைப் பகிஷ்கரிப்புப் போராட்டம் பாராட்டுக்குரியது. மாணவர்கள் முன்வைத்த சரியான நியாயமான கோரிக்கைகளுக்குத் தமிழ்மக்கள் ஏகோபித்து ஆதரவு வழங்கியுள்ளார்கள் ஜனவாரியான தரப்படுத்தல், சுதந்திர வர்த்தக வலயம், அந்நியச்சுரண்டல் தார்மீகம் பேசிக்கொண்டு அடக்குமுறை மேற்கொள்ளல் ஆகியவற்றை எதிர்த்து மாணவர்கள் வாலிபர்கள் குரல் எழுப்பியமையை கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டுகிறது''

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. என். சண்முகதாசன் யாழ். நாவாந்துறையில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு எஸ். மார்க் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சண்முகதாசன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டவாவது:-

''கடந்த தேர்தலின்போது வாலிபர்களை உணர்ச்சிவசப்படுத்தி பிழையான பாதைக்கு இழுத்துவிட்டவர்கள் இன்று தார்மீக அரசின் சலுகைகளைத் தார்மீக எதிர்க்கட்சியாக இயங்கி நன்றாக அனுபவிக்கிறார்கள். இவர்களால் உணர்ச்சிவசப்படுத்தப்பட்ட வாலிபர்களின் இன்றையநிலை என்ன? சுதந்திரமாக உலாவ முடியாமல், சரியாக உணவில்லாமல் நித்திரையில்லாமல் அவர்கள் வாழ்கிறார்கள். தமிழ் மக்கள் சரியான வழி எது, பிழையானவழி எது என்று இனங்கண்டு பிழைகளைக் களைந்து சரியான பாதையில் முன்னேறும் காலம் நெருங்குகிறது சாதாரண தமிழ்-சிங்களத் தொழிலாள, விவசாய மக்கள் ஒன்றிணைந்து பொது எதிரிக்கு எதிராகப் போராட வேண்டும். அந்தப் போராட்டத்தின்முடிவில்தான் இந்த நாட்டில் நாம் சுபிட்சவாழ்வு காணலாம்.

### காந்தி அபயசேகரா பேச்சு

திரு. காந்தி அபயசேகரா பேசுகையில் கூறியதாவது:

''பன்னாலை, முல்லைத்தீவு, பலாலி போன்ற இடங்களில் ராணுவ முகாம்களில் பட்டாளங்களைக் குவிப்பதன் மூலம் தமிழ்மக்களின் போராட்ட உணர்வை அடக்கிவிடமுடியாது வடக்கு, கிழக்கில் திட்டமிட்டு சிங்களக்குடியேற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் பிரச்னைகள் அதிகரிக்கும் தார்மிகம்பேசிக்கொண்டு வகுப்புவாதத்தைக் கிளறி அதில் ஏனைய பிரச்னைகளை மூடிமறைத்துவிட ஜே. ஆர். முனைகிறார் தமிழ்வாலிபர்கள்-மாணவர்கள் சரியான நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராடமுனைவதை நாம் வரவேற்கிறோம் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தென்னிலங்கையில் கம்யூனிஸ் கட்சியின் தலைமையிலான பத்துக்கு மேற்பட்ட வெகுஜன இயக்கங்கள் எடுத்துவிளக்கி வருகின்றன''

தொழிற்சங்கப் பிரமுகர் ஜனாப் எம். ஏ. சி. இக்பால் உட்பட மற்றும் பலர் பேசினர்.

இன்றைய சீனத்தலைமையை நிராகரித்தபின் திரு. சண்முகதாசன் வடபகுதியில் கலந்துகொண்ட முதலாவது பகிரங்கக்கூட்டம் இதுவாகும்.

[அ]

## 'சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றியவர்'

[புங்குடுதீவு]

''சைவத்தையும் தமிழையும் தன் இரு கண்களாகப் போற்றி வாழ்ந்தவர் சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள். குருக்கள் பணியை உழைப்பாகக் கருதாமல் பெருந்தொண்டாகக் கருதிச் செயல்பட்டார் அவர்''

அமரர் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்களின் நினைவு விழாவுக்கு முன் நடைபெற்ற அன்னாரது உருவப்பட ஊர்வலத்தை புங்குடுதீவு இருபிட்டி அரியநாயகன் புலம் ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலய முன்றலில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத் தலைவர் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''சைவசமயத்தைப் பீடித்திருந்த தீண்டாமை என்ற நோயை அகற்றவேண்டுமென்பதிலே அளவிலா விருப்புடன் விளங்கிச் செயலில் காட்டினார். இலங்கையில் மாத்திரமல்லாது சைவம் வியாபித்திருக்கும் தமிழ் உலகெலாம் தன் சுயநலமற்ற பணியால் பெரும் புகழ் பெற்றிருந்த இப்பெரியாரினால் தீவுப்பகுதி பெரும் புகழ் பெற்று விளங்கியது. சைவமும் தமிழும் சிறந்து விளங்க வேண்டுமென்ற அவரது இலட்சியத்தை ஈடேற்ற உழைப்பதே அன்னாருக்குத் தமிழுலகம் செய்யும் பெருங் கைமாறாகும். தான் ஒரு சைவசமயக் குருவாக இருந்தபோதும் சமுதாயத்தின் நலனையும் சமூக முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு சகல சமயங்களையும் மதித்து நடந்த

[5-ம் பக்கம் பார்க்க]

## மாத்தளையில் கதாப்பிரசங்கம் செய்கிறார்



யாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவ விழாவில் கலந்துகொள்ள தமிழ்நாட்டிலிருந்து வந்துள்ள மதுரை அமிர்தவர்ஷனி, கதாரத்னம் நெல்லை ஸ்ரீமதி ராஜம் சாரநாதன் 'மகாபாரதம்' என்னும் பொருள்பற்றி சென்ற வியாழக்கிழமையிலிருந்து தினமும் இரவு கதாபிரசங்கம் நிகழ்த்திவருகிறார்.

எதிர்வரும் 10ம் திகதிவரை இவ இங்கு கதாப்பிரசங்கம் செய்வார். அன்பர்களின் வசதியினை முன்னிட்டு நிகழ்ச்சி முடிவில் பஸ் சேவைகளை இ. போ. ச ஒழுங்கு செய்துள்ளது.

எதிர்வரும் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தேர்த்திரு விழா நிகழ்ச்சிகளை இரவு 7 மணிமுதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் நேர் முகவர்ணனை அஞ்சல்செய்யப் படவுள்ளது. [கு]

## தரமுயர்ந்தும் பயனில்லை

[பண்டத்தரிப்பு]

இவ்வருடம் தொடக்கம் பண்டத்தரிப்புத் தபால் அலுவலகம் முதலாம் தரத்திற்குத் தரம் உயர்த்தப்பட்ட போதிலும் மாலை ஆறு மணிவரை தபால் நிலையம் திறந்து வைக்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது

தரம் உயர்த்தப்பட்டும் அதற்கான ஊழியர்கள் நியமிக்கப்படாத காரணத்தால் தரம்உயர்வுக்கு அமைய கருமமாற்றமுடியாது இருப்பதாகத் தபால்நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [அ]

நாளை சிவராத்திரி

## சிவசிந்தனை

நாலாச் சிரமத்தின் நன்மையெலாம் நன்கறிந்து
மேலாந் தவநெறிகள் மேவியதன—மேலாய
பொருளடைய வேண்டுமுனே பொங்கரவம் பூண்டான்
அருளடைய வேண்டும் அறி.

அரியதாய்ப் போற்றிவளர் அன்பருக்கென் றென்றும்
உரியதாய்ப் பொங்குணர்வா யுள்ளப்—பெரியதாய்ப்
பேரருளாய் மெய்யுணர்த்தும் பெம்மானாய்ப்
பேரொளியாய்
ஆரருளாய் ஆவான் அரன்.

ஒன்றாகி வேறாய் உடனாகி நின்றுயிர்க்குப்
பொன்றாத ஞானப் பொருளூட்டும்—ஒன்றான
கண்ணுதலார் தங்கழலைக் காதலித்து நாடோறும்
நண்ணுவதே யின்பம் நமக்கு

உள்ளக் கமலத்தில் உள்ளிருந்து மெய்யாகி
உள்ளக் களவொழிக்கும் உத்தமனை—உள்ளத்தால்
உள்ளி யுவப்பெய்தி ஓவாத சித்தத்தால்
உள்ளிருக்கக் காண்பீ ருளத்து.

-- ச. தங்கமாமயிலோன்

## 'கைதடி அநாதை இல்லம் பெரும்குறையை நிறைவேற்றியது'

[மட்டுவில்]

''இந்த நாட்டில் அநாதைகள் பராமரிப்பில் ஏனைய மதங்கள் காட்டும் அக்கறையைவிட சைவசமயம் காட்டும் அக்கறை மிகக் குறைவி. அக்குறையை இன்று கைதடி அநாதை இல்லம் நிறைவேற்றியுள்ளது'' இவ்வாறு நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், கைதடியில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் கூறினார்.

கைதடியைச் சேர்ந்தவரும் கைதடி அநாதை இல்லத் தலைவருமான திரு ஆ. கந்தையாவுக்கு சமாதான நீதவான் பட்டமளிக்கப் பட்டதையிட்டும் மரணவிசாரணை அதிகாரியாக நியமிக்கப் பட்டதையிட்டும் பாராட்டு விழா எடுக்க பட்டது நல்லூர் எம். பி திரு மு சிவசிதம்பரம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார் கைதடி அநாதை இல்லத்தில் இந்த விழா நடைபெற்றது திரு. சிவசிதம்பரம் எம். பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''தாய் தந்தையர்களின் பரிதாப நிலையை உணரும் சக்தி எனக்கு அதிகம் உண்டு. நான் சிறுவயதில் தாய் தந்தையை இழந்தவன். அநாதைகளுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறது இந்த அநாதை இல்லம் ''சாவகச்சேரி எம். பி திரு வி என். நவரத்தினம் பேசுகையில் ''நண்பர் கந்தையா புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதில் மிக்க ஆர்வமுள்ளவர் அவர் சமூகத் தொண்டின் சகல கோணங்களிலும் பங்காளியாக இருந்திருக்கிறாரே தவிர பார்வையாளராக என்றுமே தூரத்தில் இருந்தது கிடையாது'' என்றார்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பருத்தித்துறை நீதிபதி திரு. கே ஞானச்சந்திரன், திரு ஆர். என். சிவப்பிரகாசம் உட்பட பிரமுகர்கள் பாராட்டுரை வழங்கினர்.

இதைத் தொடர்ந்து திரு. ஆ கந்தையா தனது பதிலுரையின்போது நன்றி தெரிவித்தார். பின் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் சிலம்புச் செல்வி என்ற வில்லிசையும் இடம் பெற்றது.



மண்டைதீவில், யாழ். கடற்றொழில் கூட்டுறவுச்சங்கம், ஏழுலட்ச ரூபா செலவில் நிறுவவிருக்கும் கோழித்தீனுக்குப் பயன்படும் மீன்உணவு தயாரிக்கும் தொழிற்சாலேக்கான இயந்திரசாதனங்களே வடபகுதியில் முதல்தடவையாக உள்ளூர் பொறியியல் நிறுவனமாகிய நல்லூர் புரோ மோட்டர்ஸ்என்ஜினியறிங் கொம்பனி லிமிட் ஸ்தானத்துக்குமேற்படிசங்க நிர்வாகம் ஆர்டர் வழங்கி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை இப்படத்தில் காணலாம். படத்தில் சங்க இயக்குநர்களும், புரோ மோட்டர்ஸ் நிறுவன இயக்குநர்களும் காணப்படுகிறார்கள்.

யாழ். நவீன மார்க்கட் விவகாரம்:

# துரையப்பா ஒப்பந்தத்தை அமுல்செய்யவேண்டும்

## தகரக் கடைக்காரர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசபை சார்பில் அமரர் மேயர் அ. த. துரையப்பா 1972ம் ஆண்டு மின்சார நிலைய வீதியிலுள்ள 6 தகரக் கடைக்காரர்களுடன் செய்துகொண்டஒப்பந்தத்தை அமுல் நடத்துமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின் படி யாழ் நவீன மார்க்கட் 2-ம்கட்டப்பகுதியில் கடைகள் பெற தங்களுக்கு சட்டபூர்வமான உரித்துண்டென்று பெரிய கடையைச் சேர்ந்த எஸ். கிருஷ்ணசாமி கடைக்காரர்சார்பில் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்

ஆணையாளருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது: காலஞ்சென்ற மேயர் அல்பிரட் துரையப்பாவிற்கும் 6 தகரக்கடைக்காரர்களுக்குமிடையில் 72ம் ஆண்டு ஏப்ரல் 15-ந் திகதி ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது

அந்த உடன்படிக்கை விபரம் வருமாறு: 6 கடைக்காரர்களையும் தொடர்ந்து அவர்கள் தற்சமயம் தொழில் செய்துகொண்டிருக்கும் இடத்திலிருந்து தொழில் செய்வதற்கு சபை அங்கீகாரம் வழங்குகிறது. தற்சமயம் முடிவு பெற்றிருக்கும் புதிய மாதிரிச் சந்தையில் மின்சார நிலைய வீதிப்பக்கம் வெளிக்கடைகள் காலியாக வந்தால் காலியாக வரும் கடைகளை வேறு எவருக்கும் கொடுக்காது ஒவ்வொரு கடையையும் இவ்விரண்டாகப் பிரித்துக் கொடுப்பதற்கு யாழ் மாநகரசபை சம்மதிக்கின்றது. புதிதாக கட்டிமுடித்த மாதிரி சந்தையில் கடைகள் காலியாகவராதுபோனல் இனிமேல் கட்டப்பேகும் புதிய சந்தையில் கடைகள் கட்டி முடிந்ததும் மின்சார நிலைய வீதி வெளிக்கடைகளில் முதலாவதாகஇந்த தகரக்கடைகாரருக்குக் கடைகள் கொடுத்தபின்பு தான் வேறுஎவருக்கும் கடைகள் கொடுப்பதென யாழ். மாநகரசபை உறுதி கூறுகின்றது.

கடைகளை கொடுப்பதற்கு மேலேகூறிய பெயர் ஒழுங்குப்படி கொடுப்பதென இருசாராரும் பொருந்தியிருக்கிறோம்,

இந்தமுடிவை மாநகர முதல்வராக எவர் வந்தபோதும் மாற்றவோ திருத்தவோ கூடாதென நாங்கள் பொருந்தியிருக்கிறோம்.

இந்த ஒப்பந்தப்படி யாழ் நவீன மார்க்கட் 2ம் கட்டபகுதியில் சட்டபூர்வமாக கடை பெற எனக்கு உரிமையிருக்கிறது

இந்த ஒப்பந்தத்தில் முதல் கையெழுத்திட்ட இருகடைக்காரர்களுக்கும் நவீன மார்க்கட் 1ம் கட்டப்பகுதியில் ஒரு கடை இரண்டாகப்பிரித்து வழங்கப்பட்டுள்ளது

ஒப்பந்தத்தை சபைமீறுது என்ற நம்பிக்கையில் நீண்டகாலமாக அமைதியாக பொறுத்திருந்தேன்.

ஒப்பந்தத்திற்கு மதிப்பளித்து முதலில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட கடைகளை வழங்கி மற்றக் கடைகளை ரெண்டரில் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன், [ஈ]

## 18 பேருக்கு அபராதம்

[யாழ்ப்பாணம்]

வாகனப் போக்குவரத்துச் சட்டத்தை மீறி, இரவில் லைட் இல்லாமல் சைக்கிளில் சென்ற 18 பேர்களுக்கு யாழ். நீதவான் தலா 50 ரூபா அபராதம் விதித்தார்

யாழ் பொலிஸ் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த கான்ஸ்டபிள்களான ஆர். பாலசுப்பிரமணியம், எம் பரமானந்தம் ஆகியோர் வழக்குத்தாக்கல் செய்தனர்.

[கொக். நி]

## இளம்விவசாயிகள் கழகம்

[வட்டுக்கோட்டை

சித்தன்கேணி இளம் விவசாயிகள் கழகத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

கழகப் போஷகர்கள் திரு. க. அருணாசலம் திருமதி எஸ். தெய்வேந்திரம்.

கழகத்தலைவர் மு. ஜயசேகரன் உபதலைவர் த. இராசலிங்கம் செயலாளர் செல்வி சு அனுசூயாதேவி உபசெயலாளர் செல்வி சி. சிவனேஸ்வரி பொருளாளர் தி. இராசகுமார் உபபொருளாளர் செல்வி சோ. தயாநிதி பத்திராதிபர் செ. ஜெயானந்தம் மேலதிக நிர்வாகிகள் சு தேவானந்தன் கு. குலரத்தினம் செல்வி அ. முல்லை செல்வி ஆ கமலாதேவி முன்னணியாளர்கள் சு. சோமாஸ்கந்தமூர்த்தி பூ சிவசிதம்பரம் செல்வி சோ. சரஸ்வதி திட்டச்செயலாளர் தெ விக்னேஸ்வரன்.

## அரசகாணிகளில் அத்துமீறியோர் கணக்கெடுப்பு

[புலோலி]

பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியில் அரசாங்கக் காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்கள் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதற்குரிய நடவடிக்கைகளை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை வேலும்மயிலும் மேற்கொண்டுள்ளார்.

இதற்கிணங்க இப்பகுதிகளிலுள்ள சகல கிராமசேவை அலுவலர்களும் தத்தம் பிரிவுகளிலுள்ள அரசாங்கக் காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டி வருகின்றனர்.

]அ]

கீழுழைப்புப் பட்டதாரிகள் பிரச்னை:

# அமைச்சர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

அரசாங்க ஐக்கிய பட்டதாரிகள் எழுதுவினைஞர் சங்கத்தின் மத்திய செயற்குழு கடந்த வியாழக்கிழமை மாலை கொழும்பில் கூடியது.

விசேஷ அழைப்பாளராக கீழுழைப்பு பட்டதாரிகள் சங்கத் தலைவர் திரு. செல்லையா மெற்றூஸ் மயில் கலந்துகொண்டார்.

மேற்படி கூட்டம் சங்கத் தலைவர் வில்மட் சேனநாயக்கா தலைமையில் நடைபெற்றது. எதிர்வரும் பங்குனி மாதம் 6ம் திகதி காலை பொது நிர்வாக உள்நாட்டு பிரதி அமைச்சர் பேர்சி சமரவீராவைச் சந்தித்துக் கீழ்காணும் கோரிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளது.

''பட்டதாரி எழுதுவினைஞர்கள் தரம் II 'ஆ' பந்தியிலிருந்து 5 வருடங்கள் பூர்த்தியடைந்தவர்களுக்கு தரம் I வகுப்பு உயர்வு கொடுக்க வேண்டும்,

''பட்டதாரி சம்பளத்துடன் வேறு சேவையில், அரச சேவையில் இருக்கும் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும்,

''அரச சேவையில் 10 வருடங்கள் பூர்த்தியாகியவர்களுக்கு விரும்புமிடத்து ஓய்வூதியம் பெற அனுமதிக்கவேண்டும்.''

இச் சந்திப்பின்போது அரசாங்க ஐக்கிய பட்டதாரி எழுதுவினைஞர் சங்கத்தின் தலைவர் திரு. வில்மட் சேனநாயக்கா, செயலாளர் எஸ். கரல் உட்பட ஐவரும், கீழுழைப்பு பட்டதாரிகள் சங்கத் தலைவர் செ. மெற்றூஸ் மயில் உட்பட இருவரும் கலந்து கொள்ளவிருக்கின்றனர். [கா]

## இன்றைய பலன்

மாசிமாதம் 12-ம் திகதி

(24-2-1979)

சனிக்கிழமை

மேடம்: நன்மையான திருப்பங்கள் காணப்படுகின்றன. திறமையின் மூலம் புதிய தொழிலுக்கான வாய்ப்புக் கிடைக்கக் கூடும். தாய்வழி மூலம் பொருள் வரவிற்கு இடமுண்டு. திருப்திகரமான தினம்.

இடபம்: உறவினர்களின் வருகை உங்களுக்கு உவகையைத் தரும். சுற்றுவட்டாரத்தில் மதிப்பு உயரும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவு மிகவும் சுமுகமாக இருக்கும். பரவசமூட்டும் நாள்.

மிதுனம்: பூமிப் பிணக்குகளால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும் வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவும். எதிலும் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

கடகம்: ஒளிமயமான சூழ்நிலை இன்று உருவாகும். வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும்.

சிங்கம்: எதிர்பார்த்த வரவில் தடை ஏற்படும். பிரயாணத்தின்போது பொருள் நழுவக் கூடும். புதிய தொழில்களை இன்று திருத்திக்கொள்ளவும். மனத்தளர்ச்சிக்கு இடம் அளிக்காது நடந்துகொள்ளவும்.

கன்னி: நீண்டநாள் பிரச்சனையில் இன்று சமரச முடிவு காணப்படும். மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்ளுவீர்கள். அரசியலில் சிலருக்கு ஆர்வம் பிறக்கும்.

துலாம்: திருப்திகரமான மாற்றங்களுக்கு இடமுண்டு. நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கைகளின் மூலம் பணபலத்தைத் தேடிக்கொள்வீர்கள்.

விருச்சிகம்: பண நிலைமை ஸ்திரமாக இருக்கும். புதிய வழிகளில் பொருள் வரவிற்கு இடமுண்டு. பெற்றோர்களின் அன்பு அவசியம் கிடைக்கும். சினிமாத் தொழிலில் ஈடுபடுபவர்கள் சிறப்படைவர்.

தனுசு: நெருக்கடியான சூழ்நிலை உருவாகும், சிலர் கடன் தொல்லையால் பாதிக்கப்படுவார்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும் கூட்டு வியாபாரத்தில் சிக்கல்கள் தோன்றலாம்.

மகரம்: விரக்தி நிலை உருவாகும். வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும். உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். நன்கு சிந்தித்தபின் செயலாற்றுக.

கும்பம்: குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும், எதையும் அலசி ஆராய விரும்புவீர்கள் நல்லதினம்.

மீனம்: எதிலும் அவசரப் போக்கைக் கடைப்பிடிப்பீர்கள் தரக்குறைவான தகவல் கிடைக்கக்கூடும் பெரியவர் ஒருவருடன் கருத்துவேற்றுமை தோன்றலாம். அடக்கம்வேண்டும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## கடையில் கலாட்டா: இருவர் கைது

[புலோலி]

ஹோட்டலொன்றில் வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு கடைமுதலாளிக்கு 'டிமிக்கி' விட முயன்று கப்பமும் கேட்டதாகக் கூறப்படும் இருவர் பொலிசாரிடம் கையும் மெய்யுமாகச் சிக்கிக்கொண்டனராம். பருத்தித்துறையிலுள்ள முஸ்லிம் ஹோட்டலொன்றிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது

பிரஸ்தாப ஹோட்டலில் புகுந்த இவ்விருவரும் 20 ரூபாவுக்குச் சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காது வெளியேற முயன்றபோது, கடைஉரிமையாளர் அவர்களிடம் பணம் கேட்க, பணம்தரமுடியாதென்று மறுத்த அவர்கள் 10 ரூபா கப்பம் தருமாறு கேட்டு கடைஉரிமையாளரை மிரட்டி பெறுமதிவாய்ந்த தளபாடங்களையும், பொருட்களையும் நொறுக்கத் தொடங்கினராம்.

இத்தகவல் பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு நிஹால் ஜெயசேகராவுக்குக் கிடைத்ததைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த இன்ஸ்பெக்டர் கலாட்டா செய்த இரு நபர்களையும் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளார். [அ]

## கல்வி நிலையம்

[யாழ்ப்பாணம்]

சுழிபுரம், பறளை சைவ சித்தாந்த சங்கத்தினர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் நினைவாக 'சைவசித்தாந்தக் கல்வி நிலையம்' என்ற பெயரில் இலவச கல்வி நிலையம் ஒன்றினை மார்ச் 6-ந் திகதி ஆரம்பிக்கின்றனர்.

ஆரம்பவிழாவில் கந்தபுராணம், விநாயக புராணம், திருவாதவூரடிகள்புராணம்பற்றிய ஆய்வுரைகள் இடம்பெறவுள்ளன.

**வெஸ்லி**
(காங்கேசன்துறை)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம் ஜி.ஆர் —பத்மினி
**விக்கிரமாதித்தன்**

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம் ஜி.ஆர் - சரோஜாதேவி
**திருடாதே**

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
**Custer of the West**

கடைசி வாரம்
**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா, நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
**பயணம்**

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
**ராஜபார்ட் ரங்கதுரை**
(ஈஸ்ட்மன் கலர்) [புதிய பிரதி]

கடைசி 6 தினங்கள்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
**உயர்ந்தவர்கள்**

10-வது வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 4 காட்சிகள் கடைசி 6 தினங்கள்
**ராணி** (யாழ். நகர்)
ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி
நடித்த
ஜெயகாந்தனின்
**ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்**
டைரக்ஷன்; A. பீம்சிங்

**REGAL** NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p. m.
**HEADLESS HORSEMAN**
(color)
தலையில்லாக் குதிரைக்காரனின் சாகசங்கள் நிறைந்த படம்

**சாந்தி** (யாழ்நகர்) 3-வது வெற்றிவாரம்!
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
இன்னும் சில தினங்கள் மட்டும் போன்: 7642
**SEVEN NIGHTS IN JAPAN**
More Suitable for Adults — Eastman Color
மகா சிவராத்திரியை முன்னிட்டு நள்ளிரவுக்காட்சி காண்பிக்கப்படும்.

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி; 2-00, 6-00&9-30
சனி, ஞாயிறு: 10-00, 2-00 6-00 & 9-30
எம். ஜி. ஆர். — பத்மினி
**மதுரைவீரன்** (புதிய பிரதி)

**லிடோ** (யாழ். நகர்)
போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
**ஆசை அறுபதுநாள்**

## பாடசாலையை தரமுயர்த்தக் கோருவர்

[ஊரெழு]

ஊரெழு கணேசவித்தியாசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டமொன்று பாடசாலை அதிபர் திரு சசிதரவேலு தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது மேற்படி பாடசாலைக்கு விளையாட்டு மைதானமொன்றுஇல்லாத குறையைப் போக்கும் வகையில் நிரந்தரமான விளையாட்டு மைதானத்தை அமைப்பதென்றும் பாடசாலையை சகல வசதிகளும் அடங்கிய மகாவித்தியாலயமாக தரமுயர்த்தும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுவதென்றும் மேற்படி சங்கக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நாளை கூடி ஆலோசிப்பர்

[யாழ்ப்பாணம்]

சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணியின் நிர்வாகசபைக் கூட்டம் நாளை காலை முன்னாள் செனட்டர் திரு ஜி நல்லையாவின் இல்லத்தில் சட்டத்தரணி திரு வி தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

யாழ், மாநகரசபைத் தேர்தலில் சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணியும் போட்டியிடுவது சம்பந்தமாக இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவிருக்கிறது. புயலால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு சீவல் தொழிலாளர்களுக்கு முன்னணிக் கிளைகள் மூலம் நிவாரண நிதி சேர்ப்பது சம்பந்தமாகவும் ஆராயப்படவிருப்பதாக நிர்வாகச் செயலாளர் திரு, அலெக்சான்டர் தெரிவித்துள்ளார். [ஈ]

## மீனவருக்குக் கடன்திட்டம்

(உடுப்பிட்டி)

வடமராட்சிக் கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வாங்குவதற்கான கடன் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மீன்பிடித் திணைக்களம் இக்கடன் வழங்கல் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் மீனவர்கள் மீன்பிடி வள்ளங்கள், வலைகள்போன்ற மீன்பிடி உபகரணங்களை 35வீதக்கழிவுடன் கடன்கொள்வனவு முறையில் பெற்றுக்கொள்ளமுடியும். (அ)

## பரி.யோவான் வெற்றி

[அரியாலை]

யாழ். பரியோவான் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குமிடையில் யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது பிரிவுக் கிரிக்கெட் போட்டியில் பரியோவான் கல்லூரி 10 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி 4 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 280 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. எஸ். கருணகுமார், என். ஆர். சோமசுந்தரம் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 115, 62 ஓட்டங்களைப் பெற்றனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக்கல்லூரிக் கோஷ்டி முதலாம், இரண்டாம் ஆட்டங்களில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 153, 137 ஓட்டங்களைப் பெற்றது. எம். சகாதேவன், ரி. மனோகரன் என்போர் முறையே 62, 56 ஓட்டங்களைப் பெற்றனர்.

பரியோவான் கல்லூரிக் கோஷ்டியில் பந்துவீசிய செல்வன் என். வசந்தன் 43ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளைப் பெற்றார்.

இரண்டாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரிக் கோஷ்டி விக்கெட்டுகளை இழக்காமல் 11 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. (இ)

## சைவத்தையும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாண்பினர் எதிர்கால சந்ததிக்கு நினைவூட்டுமுகமாக புங்குடுதீவில் அவர் வாழ்ந்த வீட்டின் முன்றலில் பிரதான வீதியில் அவரது உருவச் சிலையை நிறுவ வேண்டும்''

அமரரின் ஊர்வலம் தொடங்குமுன் கிரியைகளை பிரம்மஸ்ரீ நாகேந்திரக்குருக்கள் நடத்தி வைத்தார்.

### சிவராத்திரி தினத்தில்

# சிவாயநம என்று சிந்திப்போம்

--சித்தாந்த நல்லறிஞர் கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் -

**தைப்** பனி தரையைத் துளைக்கும் என்றும் மாசிப் பனி மச்சைத் துளைக்கும் என்றும் பனிக்குப் பயப்படுவோர் கூறுவதுண்டு இவர்கள் சிவராத்திரி எப்போது வரும் என்று எதிர்பார்த்திருப்பார்கள் சிவராத்திரிக்குப் பின்னர் பனி யெல்லாம் சிவ சிவா என்று போய் விடும் என்றும் சொல்வதுண்டு.

உண்மையில் ஞானிகள் அறிஞர்கள் பெரியோர்கள் யாவரும் பாவம் என்ற பனித் தொல்லையிலிருந்து காப்பற்றப் படுவதற்காகவே சிவராத்திரி பூசை செய்கிறார்கள்

சக்திக்கு ஒன்பது இரவுகள் அதுநவராத்திரி சிவனுக்கு ஓர் இரவு அது சிவராத்திரி சிவராத்திரி என்ற சொல் சிவனுடையராத்திரி சிவமான ராத்திரி சிவனை வழிபடும் ராத்திரி சிவனுக்குப்பிரியமான ராத்திரி என்று பல வகைப் பொருளைத்தரும். சிவமான ராத்திரி என்பதே இவைகளில் மிகப்பொருத்தமானது.

மாசித் திங்களின் கிருஷ்ண சதுர்த்தசி நள்ளிரவில் பரம்பொருளாகிய சிவபெருமான் சிவலிங்கத்தில் தோன்றினார், அன்றே மகாசிவராத்திரி. ஆதலால் இப்பொழுதும் அந்தப் புண்ணிய இரவில் உலகிலுள்ள எல்லா இலிங்கங்களிலும் சிவன் தோன்றுவதாகக் கொள்ளப்படுகிறது. கருணை வடிவாகிய தேவி நமக்காகச் சிவபூசை செய்த நாள் சிவராத்திரியாகும். 'சிவம்' என்ற சொல்லுக்கே துன்பத்தைத் துடைக்கவல்லது என்று அர்த்தம்.

சிவபூஜை விதி தவறாமல் நான்கு சாமத்தும், சாமத்திற்கு ஒருமுறையாகப் பூஜை செய்யவேண்டும். முதல் ஜாமம் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் இவ்வைந்தும் கலந்த பஞ்சகவ்யத்தால் அபிஷேகம் செய்து வில்வம் சாத்தி, தாமரை மலரால் அர்ச்சிக்கவேண்டும், அச்சமயம் பயற்றம் பருப்பு சேர்ந்த பொங்கல் நிவேதித்துத் தூப தீப ஆராதனை செய்து இருக்கு வேதம் ஓதி வழிபடல் வேண்டும்.

இரண்டாம் ஜாமம்-பஞ்சாமிருதத்தால் அபிஷேகம்செய்து சந்தனத்துடன் தாமரை மலரும் சாத்தி துளசியால் அர்ச்சித்துப் பாயசம் நிவேதித்து யஜுர் வேதம் ஓதி வணங்க வேண்டும்.

மூன்றாம் ஜாமம் தேனால் அபிஷேகம் செய்து அரைத்த பச்சைக் கற்பூரத்துடன் சாதி முல்லைமலர் சாத்தி முத்தலை கூடிய வில்வதளத்தால் அர்ச்சித்து எள் அன்னம்நிவேதித்து சாமவேதம் ஓதி வழிபடல் வேண்டும்.

நான்காம் ஜாமம்- கருப்பஞ் சாற்றினால் அபிஷேகித்து அரைத்த குங்குமப்பூவுடன் நந்தியாவட்டை மலரும்சாத்தி நீலோற்பல மலரால் அர்ச்சித்துச் சுத்த அன்னம் நிவேதித்து அதர்வண வேதம் ஓதி வழிபடல்வேண்டும்.

இவ்வாறு நான்கு ஜாமத்தும் நித்திரை நீங்கிப் பூசித்து மறுநாள் அதிகாலையில் புனித நீராடி அநுஷ்டானம் இயற்றி சூரியன் உதித்து ஆறு நாழிகைக்குள் பாரணை செய்ய வேண்டும் இவ்வாறுவிரதத்தை அனுஷ்டிப்போர் சிவகதி பெறுவர்.

சிவராத்திரியில் சிவநேயர்கள் கண்மூடாமல் வில்வ இதழ்களைக் கொண்டு சிவபெருமானை அர்ச்சிப்பார்கள் வில்வ

[6-ம் பக்கம் பார்க்க]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல- M B/2187.

வைத்திலிங்கம் தம்புவும், பெண் செல்லம்மாவும் சித்திரமொழி இளவாலை.

எதிராக —வழக்காளிகள்:

அல்பேட் குருசாமியும் பெண் மரியம்மாவும் இல 37 B-ரவுன், கற்றன்

—எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் M B/2187ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1979ம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி (19-3-1979) திங்கட்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏல விற்பனையை நடாத்த நியமித்துள்ளேன்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 4995/-வும் மேலும் 3000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 14 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1978ம் ஆண்டு மாசி மாதம் 14ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1978ம் ஆண்டு புரட்டாசி மாதம் 29ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 521-65 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதிபண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை 'அக்கத்தனை' நில. பர. 18 குளி 3 இதில் தெற்குப் பக்கமாக நில. பர. 10 இதில் தென்கிழக்குப்பக்கமாக நில. பர ஐந்தும் கிணறும் இந்த நில பர ஐந்துக்கும் எல்லை கிழக்கு சுவாம்பிள்ளை பெண் செல்வநாயகத்தின் ஆதனம், வடக்கும் மேற்கும் இதன் மிகுதியாதனம், தெற்கு படதர்ம ஆதனம். இதில் குறித்த கிணற்றில் மேற்கெல்லைக் காணியின் மேற்கெல்லைக் காணிக்குரிய அரைவாசிப்பங்கும் மிகுதிக் காணிக்குரிய [¼] நாலிலொரு பங்கும் வழிவாய்க்காலும் புறநீக்கலாக இதடங்கலும். இன்னும் மிகுதிக் காணியின் மேற்கருகாலும் அதன் வடக்கு எல்லைக் காணியின் மேற்கருகாலும் கிராமச்சங்கஒழுங்கையில் இருந்து வரும்ஆறுமுழ அகலப் பாதை உரித்தும் பதிவு E449-74.

சி. செ. பாலசிங்கம்,
(கொமிஷனரும் மதிப்பாளரும்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை:
12-2-1979

1735

# கூட்டணி, இளைஞர் பேரவை நெருக்கடிக்கு மத்தியில் எதுவித தீர்மானமும் எடுக்க வேண்டாம்

## மாவை, வேணுதாஸ் சிறையிலிருந்து கடிதம்

[கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ் இளைஞர் பேரவை அமைப்புக்குமிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில் மேற்கொண்டு எதுவித தீர்மானமும் எடுக்க வேண்டாம்

இவ்வாறு சிறையிலிருக்கும் இளைஞர் பேரவை அமைப்பாளர் மாவை சேனாதிராசாவும் வேணுதாஸும் இளைஞர் பேரவை நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். யோகநாதனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதம் 3ம் திகதி கூட்டணிச் செயல் அதிபர் திரு. அமிர்தலிங்கம் கூட்டும் கூட்டத்தில் இளைஞர்பேரவை அங்கத்தவர்கள் சகலரையும் கலந்துகொள்ளுமாறும் அதுவரை எதுவித அறிக்கைகளையும் பத்திரிகைகளுக்கு வெளியிடவேண்டாம் என்றும் அக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தாம் சிறையிலிருந்து வெளி வந்ததும் சரியான தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு இடமளிக்குமாறும் அக் கடிதத்தில் அவர்கள் கேட்டுள்ளனராம். [ம-இ]

## சிவராத்திரியை முன்னிட்டு விசேட பஸ் சேவை

(கொக்குவில்)

சிவராத்திரியை முன்னிட்டு வடபகுதியில் பல இடங்களில் இருந்தும் திருக்கேதீஸ்வரத்திற்கு விசேட பஸ்சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

இன்று பகல் தொடக்கம் யாழ் பஸ்நிலையத்திலிருந்து விசேட பஸ்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று கிளிநொச்சி டிப்போவிலிருந்தும் பல விசேட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

நாளை ஞாயிறு காலை 9-30 மணிக்கு தொண்டமானாற்றில் இருந்து புறப்படும் பஸ் புத்தூர்சந்தி நுணாவில் கனகன் புளியடி சாவகச்சேரி ஊடாக கண்டி வீதி வழியாக திருக்கேதீச்சரம் ஆலயத்திற்குச் செல்லும். கீரிமலையிலிருந்து மாலை 2-15 மணிக்கு புறப்படும் பஸ் உடுப்பிட்டி நெல்லியடி, பரந்தன், கிளிநொச்சி, கண்டி வீதி ஊடாக திருக்கேதீஸ்வரம் சென்றடையும்.

பாண்டியன் குளத்திலிருந்து மாலை 4-30 மணிக்குப் புறப்படும் பஸ் மாங்குளம், வவனியா ஊடாக திருக்கேதீச்சரம் சென்றடையும்.

கிளிநொச்சியிலிருந்து காலை 10 மணிக்குப் புறப்படும் பஸ் கண்டி வீதி வழியாக திருக்கேதீச்சரம் சென்றடையும்.

யாத்திரிகர்கள் கோவிலில் இருந்து வீடு செல்வதற்கு வசதியாக திங்கட்கிழமை திருக்கேதீச்சரத்திலிருந்து சகல பகுதிகளுக்கும் விசேட பஸ்... சேவையில் ஈடுபடுத்தப்படும். [இ]

## விசேட ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரியை முன்னிட்டு புகையிரதத்திணைக்களம் திருக்கேதீஸ்வரத்திற்கு விசேஷ ரயில் சேவைகளை ஏற்பாடு செய்துள்ளது.

திருக்கேதீஸ்வரம் புகைவண்டி யாத்திரிகர் தொண்டர் சபையின் முயற்சியால் இச்சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாளை ஞாயிறு காலை கொழும்பிலிருந்தும், காங்கேசன்துறையிலிருந்தும் புறப்படும் யாழ்தேவி, உத்தரதேவி கடுகதி ரயில்களில் செல்லும் பிரயாணிகளைத் திருக்கேதீஸ்வரத்திற்கு ஏற்றிச்செல்வதற்காக மதவாச்சியிலிருந்து காலை 10-30 மணிக்குப் புறப்படும் விசேஷ ரயில் 11-50க்கு திருக்கேதீஸ்வரம் ரயில்நிலையத்தைச் சென்றடையும்.

இதேபோன்று கடுகதிப் புகையிரதங்களில் செல்லும் பிரயாணிகளின் வசதிக்காக மதவாச்சியிலிருந்து மாலை 5 மணிக்குப் புறப்படும் ரயில் 6-22க்குத் திருக்கேதீஸ்வரத்தைச் சென்றடையும்.

26ந் திகதி திங்கட்கிழமை காலை 7-30 மணிக்கும் பின்னர் 9-20க்கும் பகல் 1-15க்கும் விசேஷ ரயில்கள் திருக்கேதீஸ்வரத்திலிருந்து மதவாச்சிவரை செல்லும்.

திருக்கேதீஸ்வரம் ரயில்நிலையத்திலிருந்து கோவில்வரை விசேட இணைப்பு பஸ்சேவைகளும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

### அன்னதானம்

ஞாயிற்றுக்கிழமை பகல் மதவாச்சியிலும் திங்கள் காலையும் மாலையும் திருக்கேதீச்சரத்திலும் புகைவண்டி யாத்திரிகர் தொண்டர்சபையினர் அன்னதானம் வழங்குவர்.

புகையிரதநிலையத்திற்கு அருகில் உள்ள மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும். [இ]


## தேவை

### நூல் திரிக்கும் இயந்திர இயக்குநர்

குருநகரில் அமைந்துள்ள எமது வலைத்தொழிற்சாலையில் நூல் திரிக்கும் இயந்திர இயக்குநர் பதவிக்கான வெற்றிடம் உண்டு. பின்வரும் தகுதியுடையோர் இம்மாதம் 27-02-79-ந் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

[1] நூல் திரிக்கும் இயந்திர இயக்குநராக குறைந்தது 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

[2] வயது 20—40 ற்கும் உட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

[3] இயந்திரம் திருத்துதலில் அனுபவமிருந்தால் அது மேலதிக தகைமையாகக் கவனிக்கப்படும்.

நிர்வாக இயக்குநர்,
சீ நோர் அபிவிருத்தி நிறுவனம்,
காரைநகர்.

1741


## கண்டனக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சிதம்பர தீர்த்தக் கரைச் சுற்றாடலில் மேல் நாட்டு யாத்திரிகர் விடுதியொன்றை அரசு நிறுவ மேற்கொள்ளும் நடவடிக்கையை கண்டித்து இன்றுமாலை காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் ஈழத்துப் புனிதப் பிரதேசப் பாதுகாப்புச் சபை பகிரங்க பொதுக்கூட்டமொன்றை நடத்தவுள்ளது. [செ]

0 0 0

## இசையரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். நுண்கலை மன்றம் அளிக்கும் மாதாந்த இசை நிகழ்ச்சி வரிசையில் இம்மாத நிகழ்ச்சியாக பொன். சுபாஸ் சந்திரனின் இன்னிசைக் கச்சேரி இன்று மாலை 6 மணிக்கு யாழ் நிம்மர் மண்டபத்தில் நடைபெறுகின்றது. வி. கே. குமாரசாமி வயலினும், எஸ். மகேந்திரன் மிருதங்கமும், ஜி. விஜயன் கடமும், எம். சிதம்பரநாதன் கஞ்சிராவும், எஸ். என். ஜேம்ஸ் முகர்சிங்கும் வாசிப்பர். (அ)

0 0 0

## சிறுவர் கலை விழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் ஆண்டையொட்டி சிறுவர் கலைவிழாவொன்று இன்றுமாலை நாரந்தனை ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. விழாவிற்கு மேற்படி கல்லூரி அதிபர் திரு அ சிங்கராயர் தலைமைதாங்குவார். (செ)

## சிவாயநம...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இதழ் இவர்கள் நெஞ்சில் தழைக்கும் பேரன்பின் அறிகுறி சிவலிங்கத்தில் சிவம் இருக்கிறது; விஷ்ணு இருக்கிறார்; பிரம்மன் இருக்கிறார். எல்லாக் கடவுளரையும்ஒன்று சேர்த்தே லிங்கம் விளங்குகிறது. லிங்கத்தின் பீடம் ஆவுடையார் எனப்படுவது சக்திரூபம். பாணம் சிவரூபம், பீடம் கிரியாசக்திவடிவம், லிங்கம் ஞானசக்தி வடிவம், பீடத்தின் அடிப்பாகம் பிரம்மரூபம். நடுப்பாகம் விஷ்ணுரூபம். இவ்வாறான தத்துவ விளக்கமும், பெருமையும் சிறப்பும் வாய்ந்த சிவலிங்க வடிவத்தை சிவராத்திரி தினத்தில் சிவாயநம என்று சிந்தித்து வழிபாடு ஆற்றுவோமாக.

## காங்கிரஸ் வழக்கு

[யாழ்ப்பாணம்]

தமிழ்க்காங்கிரஸ் வழக்கில் மனுதார் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளைக்கு சுகவீனமானதால் வழக்கு இம் மாதம் 27ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [க]

## யாழ். வளாக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இறந்தவரின் வயிற்றில் நச்சுத்திராவகம் இருந்ததற்கான காரணம்பற்றி விசாரணை செய்யுமாறு பொலிசாருக்குப் பணித்த மரணவிசாரணை அதிகாரி சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் சென்றுபார்வையிட்டார்.

தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இறந்தவரின் உள்ளுறுப்புக்களும் ஆய்வுகூடத்தில் கிளாஸ் ஒன்றும் எஞ்சியிருந்த நச்சுத்திராவகமும் இரசாயன பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. [கொ-இ]

## தமிழ் இளைஞருக்கு

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு. வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"தமிழ் இளைஞர் இயக்கங்களால் ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்திற்கு ஆதரவளித்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் வேலைநீக்கஞ் செய்யப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி பாழடிக்கப்பட்டுள்ளது.

"ஜனாதிபதியின் வகுப்புவாதக் கொள்கைக்கு எதிராக இம்மாத ஆரம்பத்தில் ஒரு வாரம் மாணவரும், ஆசிரியர்களும் ஆட்சேபித்தனர். யூ. என். பி. அரசு இவர்களைப் பழிவாங்கியுள்ளது.

"அரசுக்கெதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜனநாயகத்தை வென்றெடுக்கும் போராட்டத்திற்கு நமது பூரண ஆதரவுண்டு.

"பழிவாங்கப்பட்ட ஆசிரியருக்கும், மாணவருக்கும் நீதி வழங்கவேண்டும்.

"அரசுக்கு எதிரான போராட்டத்திற்கான ஆதரவை, வடக்கிலுள்ள கட்சி ஆதரவாளர் திரட்டிவருகின்றனர். [க]

## நவீனமார்க்கட் வழக்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். நவீனமார்க்கட் வழக்கு இம்மாதம் 27ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நேற்று இவ்வழக்கு எடுக்கப்பட்டது.

## சீனாவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உலக யுத்தத்திற்கே அடிகோலுகிறது.

"சீனாவின் தாக்குதலுக்கு ஒரேயொரு காரணம் உண்டு. பொல்பொட்டின் மிலேச்சத்தனமான அரசைத் தூக்கியெறிந்து, கம்போடியாவில் ஒரு சோஷலிஸ ஆட்சியை வியட்நாம் அமைத்ததைச் சகிக்கமுடியாததுதான் இதற்குக் காரணமாகும்.

"சீனத் தலைவர்கள் இவ்வாறுதான் வியட்நாமைத் தண்டிக்கவேண்டுமென பலதடவை பல இடங்களில் கூறியிருக்கிறார்கள்.

"பொல்பொட்டின் அரசு, மிலேச்சத்தனமான அரசென்பதை அவரின் பிரதிநிதியான இளவரசர் சிகானுக்கே ஏற்றுக்கொண்டிருக்கிறார். இத்தாக்குதலையொட்டி இலங்கை அரசு என்ன கருத்துக்கொண்டிருக்கிறது?

"கம்போடியாப் புதிய அரசு பற்றி இலங்கை அரசு என்ன கருத்துத் தெரிவிக்கிறது? இலங்கை அரசு அக்கறை இல்லையென்று பேசாதிருக்க முடியாது.

"சரியோ பிழையோ அரசு இன்று மூன்றாவது உலகநாடுகளுக்குத் தலைமைதாங்குகின்றது. எனவே அந்த நாடுகளுக்கு வழிகாட்டும் பொறுப்பு இலங்கை அரசைச் சார்ந்தது. எனவே அரசுதன துநிலையைக்கூறவேண்டும்". (ம-க)

## தீவிரமாக...

[1ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில்பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா ஒத்திவைப்புப் பிரேரணையின் மீது மானிப்பாய எம் பி திரு வி தர்மலிங்கம் வியட்நாம் போர் பற்றி கிளப்பிய பிரச்னைக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

வியட்நாம் யுத்தத்தில் அரசின் நிலையைக் கூறவேண்டும் என திரு தர்மலிங்கம் கேட்டிருந்தார்.

பிரதமர் பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது:

நாம் கூட்டுச்சேராக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் அநீதி நடக்கும்போது அதைச் சும்மா பார்த்துக்கொண்டு இருக்கமாட்டோம். அமைதியாக ஆராய்ந்து கருத்துக்களை வெளியிடுவோம்.

மானிப்பாய் எம் பி இது தங்களுடைய கருத்தா அல்லது கட்சியின் கருத்தா?

பிரதமர் நேற்று நடந்த பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் இவ்விடயம் ஆராயப்பட்டது [ம-க]

## வேலை இழந்த ஆசிரியர் பிரச்னை: இன்று கூட்டம்

[யாழ்ப்பாணம்]

பகிஷ்கரிப்புக் காலங்களில் சேவைக்குச் சமூகமளிக்கத் தவறி, வேலையிழந்த ஆசிரியர்களின் பிரச்னை தொடர்பாக முக்கிய முடிவுகளை மேற்கொள்ளும் பொதுக்கூட்டமொன்று, இன்றுகாலை இலங்கை ஆசிரியர் சங்க யாழ் மாவட்டக்கிளை பணிமனையில் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு எச். என் பர்னாந்து செயலாளர் திரு சித்திரரால் பெரேரா உட்பட யாழ். மாவட்டக்கிளை பிரமுகர்களும் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். [கெ-இ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News Paper in Sri Lanka.-